**பியகம பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பியகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பியகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியமத்தின் பந்தி 2.5 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதி லும் கடந்த ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்ட ணம் மற்றும் செலுத்தப்பட்ட | கணக்காய்வு கட்டணம் குறித்துரைத்த ரீதியில் தீர்மானிக்க முடியாதிருந்த துடன் முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணத்திற்காக அந்த நிறுவனங்களில் | நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| கணக் காய்வுக் கட்டணங்களின் பெறுமதி முறையே ரூபா 295,398,089 மற்றும் ரூபா 546,981 வருமானம் மற்றும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தலைமையில் மேற்கொள் ளப்பட்டிருந்தது. |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நடப்பாண்டிற்குரிய மீளளிப்புச் செய்யபபடாத ஊழியர் சம்பளம் ரூபா 15,036,101 ஊழியர் சம்பளக் கணக்கில் வரவு வைப்பதற்கு பதிலாக திரண்ட நிதியத்தில் வரவுவைக்கப்பட்டிருந்தது. | இதன் பின்னர் மேற்கொள் ளாதிருப்பதகு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரி மற்றும் மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் 20ஆம் பிரிவு | 2008 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆதனவரி அறவிடப்பட்டி ருந்தது. | புதிய மதிப்பீடொன்றுக் காக மதிப்பீட்டுத் திணை க்களத்திலிருந்து கோரப் பட்டுள்ளது. | மீள் நினைவூட்டல் அனுப்பப்பட்டு புதிய வீதத்தின் பிரகாரம் ஆதனவரி அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | கூட்டுப் பெறுமதி ரூபா 1,443,559 ஆன வைப்புக்கள் ஒய்வுபெறச் செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மேல் மாகாண பிரதேச சபைகளுக்கான நிதி | ஊழியர் கடன் முற்பண கணக்கு பேணிச் செல்லப் | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| நிருவாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளை இலக்கம் 83(ii) | பட்டிருக்கவில்லை. | எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 201,645,061 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 188,532,345 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 78,937,332 | 81,142,124 | 85,082,494 | 68,915,184 | 78,530,710 | 78,878,277 | 72,893,953 | 72,855,554 |
| (ii) | வாடகை | 8,188,546 | 7,023,996 | 6,381,916 | 11,653,229 | 7,679,130 | 7,184,542 | 6,374,447 | 11,218,577 |
| (iii) | அனுமதி ப்பத்திரக் கட்டணம் | 6,145,000 | 6,313,725 | 51,717,824 | | 6,318,000 | 5,778,977 | 5,778,977 | |
| (iv) | ஏனைய வருமான ம் | 36,191,100 | | 48,616,222 | | 29,683,100 | | 42,557,869 | |
| | மொத்தம் | 129,461,978 | 94,479,845 | 191,798,456 | 80,568,413 | 122,210,940 | 91,841,796 | 127,605,246 | 84,074,131 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஆதனவரியும் வரியும்** | | |
| (i) 2023 சனவரி 01 ஆம் திகதியில் உள்ள வாறு ரூபா 72,855,555 ஆன நிலுவை ஆதனவரி மீதியில் ஆண்டின் போதான அறவிடல்கள் ரூபா 21,691,292 ஆனமை யால் அறவிடல்கள் 30 சதவீதமாக இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுதல் மேற்கொள் ளப்படுகின்றது. | நிலுவை ஆதனவரி வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (ii) நிலுவை ஆதனவரி பெறுமதி ரூபா 50,000 இற்கு மேற்பட்ட 05 அலகுகளில் நிலுவை மீதி ரூபா 1,730,501 அறவிடப் பட்டிருக்கவில்லை. | ஆதனங்களைத் தடை செய்து அறவிடப்படும். | நிலுவை ஆதனவரி வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (iii) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதியில் ரூபா 17,500,243 ஆன 25 சதவீதம் 05 வருடங்கள் முதல் 10 வருடங்களுக்கு இடையிலும், ரூபா 16,586,007 ஆன 24 சதவீதம் 03 வருடங்கள் முதல் 05 வருடங்களுக்கு இடையிலும், ரூபா 14,528,152 ஆன 21 சதவீதம் 10 வருடங்களுக்கு மேற்பட்டும், ரூபா 11,716,944 ஆன 17 சதவீதம் 01 முதல் 03 வருடங்களுக்கு இடையிலும், ரூபா 8,583,838 ஆன 12 சதவீதம் 01 வருடத்திற்கு குறைந்த மீதியும் காணப்பட்டது. | திட்டங்களின் பிரகாரம் அறவிடப்படுகின்றது. | நிலுவை ஆதனவரி வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| (i) மீளாய்வாண்டின் இறுதித் திகதியிலுள்ள வாறு நிலுவை வியாபார நிலைய வாட கை மீதியில் 89 சதவீதமான ரூபா 8,904,453 தொகை 05 இற்கும் 10 வருடங்களுக்கு இடையிலும், 10 சதவீதமான ரூபா 1,023,480 தொகை 03 இற்கும் 05 வருடங்களுக்கு இடையிலும் காணப்பட்டது. | நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் நிலுவை அறவிடப் படுகின்றது. | நிலுவை வியாபார நிலைய வாடகை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியிலுள்ள வாறு நிலுவை வாடகை மீதியில் 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 1,053,157 தொகையும், 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான மீதி ரூபா 428,071 தொகையும் காணப்பட்டது. | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வாடகை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (iii) | 2023 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை வாடகை மீதி ரூபா 1,671,055 தொகையில் அறவிடப்பட்ட பெறுமதி ரூபா 124,625 ஆனமையால் அது சேகரிக்கப்பட்ட சதவீதத்தில் 07 சதவீதமாக இருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வாடகை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

**(ஈ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் 02 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான முத்திரைக் கட்டண பட்டோலைகள் தயாரித்து மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | பட்டோலைகள் தயாரிப்பதற்கு முடியாதிருந்தது. | பட்டோலைகள் தயாரித்து நீதி மன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது கிடைத்த 345 முறைப்பாடுகளில் 213 இற்காக மாத்திரம் தீர்வு வழங்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | பொதுமக்கள் முறைப்பாடுகள் தீர்த்துவைக்கப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் மீதியில் 02 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 17,000,000 தொகையும், 01 இற்கும் 02 வருடங்களுக்கும் இடையில் ரூபா 35,576,155 தொகையும் ஆக இருந்ததுடன் அந்த | மிகுதித் தொகையை மீளளிப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | கடன் கொடுத்தோர் மீதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2000 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை வைப்புச் செய்யப்பட்ட 792 வீட்டு வாடகை வைப்புக்களின் பெறுமதி ரூபா 804,347 அதாவது வீட்டு வாடகை உரிமையாளர்களுக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | வீட்டு உரிமையாளர்க ளுக்கு அறிவித்து தீர்த்து வைக்கப்படும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை கடன்கொடுத்தோர் மற்றும் நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த 14 விடயங்களின் பெறுமதி ரூபா 53,199,658 பூர்த்திசெய்யப்பட்டு கடன் கொடுத்தோர் மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி மீளளிப்புச் செய்யும் வரை கொடுப்பனவு செய்யப்பட முடியாததாக காணப்பட்டது. | பணிகளை பூர்த்தி செய்து செலுத்துதல் வேண்டும். |
| (ஈ) | பெறுமதி சேர் வரிக் கணக்கின் மீதி ரூபா 2,425,043 தொகை பல வருட காலமாக தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் தீர்த்து வைக்கப்படும். | தீர்த்து வைக்கப்பட வில்லை. |

## 3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 02 ஆம் திகதி ரூபா 1,025,000 தொகையில் கலிபௌசர் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் பின்னர் களிபௌசர் சேவை நடாத்திச் செல்லப்பட்டிருக்க வில்லை. | சபை அதிகாரப் பிரதேசத்தில் ஈடுபடுத்துவது ஆக்கபூர்வமானதாக இல்லாமையினால் வீதிப் பராமரிப்புக்காக பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | விளைவற்ற செலவினங்க ளுக்கு பொறு ப்புவாய்ந்த தரப்பினரிடமிருந் து அறவிடல் வேண்டும். |
| (ஆ) | பெரும்பாக பொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு பெறுமதி ரூபா 295,000 ஆன டெக்டர் செயலிழந்தமையினால் 2017 ஆம் ஆண்டு முதல் | பராமரிப்பு நடவடிக்கைக ளுக்காக அனுப்பப்பட்டுள் ளது. | பழுதுபார்க்கப் பட்டு பயன்பாட் டிற்கு எடுப்ப தற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ |

| | | | |
|---|---|---|---|
| | கழிவுப்பொருள் தளத்தில் கைவிடப்பட்டிருந்தது. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பெறுமதி ரூபா 2,739,000 ஆன 06 குளிக்கும் கிணறுகள் மூடப்பட்டிருந்தமையும் பெறுமதி ரூபா 3,642,000 ஆன 24 குளிக்கும் கிணறுகள் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | சந்தர்ப்ப சூழ்நிலைக ளுக்கு ஏற்ப பயன்படுத் தப்படுகின்றது. | தேவையினை சரியாக இனங் கண்டு பயன்ப டுத்துவதற்கும் மற்றும் கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதிகளை மீண்டும் திருத் துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுமதி ரூபா 127,400,000 ஆன சபைக்கு சொந்தமான 27 காணிக் கூறுகளின் எல்லை அமைத்து பெயர் பதாதை பொரு த்தப்பட்டிருக்கவில்லை. | எல்லை தயாரிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | எல்லை தயாரித்து பெயர் பலகை பொருத்தப்படு தல் வேண்டும். |
| (ஆ) | பெறுமதி ரூபா 479,000 ஆன 04 குழாய் கிணறுகளை கண்டறிய முடியவில்லை. | குழாய் கிணறுகளை இனங்காண முடியாதிருந் ததுடன் மீள்மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பப்பட்டு ள்ளது. | கணக்கீடு செய்யப்பட்டுள்ள சொத்துக் கள் பௌதீக ரீதியில் இனங் காணப்படல் வேண்டும். |
| (இ) | நிதி அமைச்சில் இருந்து 1995 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 500,000 பெறுமதியான டெக்டெர் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளது. | பயன்படுத்தப் படுகின்ற வாகனங்களை சபைக்கு கையேற்றல் வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை சபையில் சேவையை விட்டுச் சென்ற, ஓய்வுபெற்ற, மரணமடைந்த 09 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடுகள் மற்றும் முற்பண மீதிகள் ரூபா 1,229,662 அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் பணத்தை செலுத்துமாறு அறிவிதத்ல் மற்றும் ப்பதற்கும், மரணப் பணிக்கொடை தயாரித்து அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஊழியர் கடன் நிதி அறவிடப்படல் வேண்டும் |